**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியானதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள்,

அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 07 ஆம் இலக்க நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் பிரச்சார மற்றும் மேம்படுத்தல் கிரயமானது ஆதனம், பொறி, உபகரணங்களின் கிரயத்தில் உள்ளடக்க முடியாத போதிலும், நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,162,025 பிரச்சார மற்றும் மேம்படுத்தல் கிரயமானது சொத்தொன்றாக கட்டிடங்கள் மற்றும் முடிவுறா வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் புதிய நிர்வாகக் கட்டிடம், விரிவுரை மண்டபம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக விசேட மூலதன பிரேரணையொன்றின் மூலம் நிதி வசதிகள் நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடங்களிற்கான அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகளை ஆரம்பிப்பதற்காக அறிவிப்பதற்காகவும் பங்குபற்றியோருக்கான செலவினத்திற்கும் செய்யப்பட்ட ரூபா 1,162,025 கிரயத்தை குறித்த செயற்திட்டச் செலவினமாகக் கருதி முடிவுறா வேலைகளில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய, இக்கிரயத்தை குறித்த கட்டிடத்தின் ஒரு பகுதியாகக் கருதி இத்தொகை | நியமத்தின் பிரகாரம் பிரச்சார மற்றும் மேம்படுத்தல் கிரயத்தை கட்டிடங்கள் கிரயத்தில் உள்ளடக்க முடியாதென்பதுடன் அச் செலவினத்தை மிகை அறவீடாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

|  |  |  |
|---|---|---|
|  | மூலதனமாக்கப்பட்டதுடன், குறித்த நியமத்தின் 31 ஆவது பிரிவில் கட்டிட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கான பிரச்சார மற்றும் நிர்வாகக் கிரயத்தை வகைப்படுத்துதல் தொடர்பில் உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காமையால் மேற்படி கட்டிடத்தின் ஆரம்பக் கிரயமாக கருதி மூலதனமாக்கப்பட்டுள்ளது. |  |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கும் மேலாக கணக்குகளில் காணப்படுகின்ற ரூபா 239,901 கூட்டுத்தொகையான 02 கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 239,901 தொகையான கடன்பட்டோர் மீதி அரசாங்க தொழில் முயற்சிகளான எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி மற்றும் மானவ பெருந்தோட்ட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிடமிருந்து பெறவேண்டியதாக இருப்பதுடன், பல கோரிக்கைகள் விடுவிக்கப்பட்ட போதிலும், இது வரை குறித்த தொகை தரப்படவில்லை. இந்த மீதியை 2019 இல் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டியுள்ள தொகைகளை அறவிடுவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

# 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 67,659,429 மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 8,276,437 ஆக இருந்தது. அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 59,382,992 முன்னேற்றம் காணப்பட்டது. செயற்திட்ட மானியம் ரூபா 44,700,000 இனாலும் பயிற்சி வருமானம் ரூபா 15,155,939 இனாலும் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

---------------------------

நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டின் 1:1.33 இலிருந்து மீளாய்வாண்டில் 1:9 வரையிலும் திரவத்தன்மை விகிதம் 1:1.34 இலிருந்து மீளாய்வாண்டில் 1:8.43 வரையிலும் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்புகளிற்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்டங்களின் வைப்புக்கள் மற்றும் முற்செலுத்திய மருத்துவக் காப்புறுதித் தொகைகளின் அதிகரிப்பு என்பன பிரதான காரணங்களாக காணப்பட்டன. முன்னைய ஆண்டின் 7.17 சதவீதமான இலாப விகிதம் 33.87 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், விசேட செயற்திட்ட மானியம் ரூபா 44 மில்லியனால் அதிகரித்திருந்தமை இதற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

--------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த 05 ஆண்டுகளின் தகவல்களை ஒப்பீடு செய்கையில் இறப்பர் மற்றும் தேயிலைக்காக நிறுவனத்தினால் நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையும் அதற்காக பங்குபற்றியோரின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் இறப்பர் மற்றும் தேயிலைக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை முறையே 83 மற்றும் 58 சதவீதங்களால் வீழ்ச்சியுற்றும் அவற்றில் பங்குகொண்டோரின் எண்ணிக்கை முறையே 88 மற்றும் 54 சதவீதங்களால் குறைவடைந்தும் காணப்பட்ட போதிலும், குறித்த | மேற்படி 05 ஆண்டு காலத்திற்காக நிறுவனத்தினால் தேயிலை மற்றும் இறப்பர் துறைக்காக நடாத்தவதற்கு உத்தேசித்துள்ள பாடநெறிகளைக் குறிப்பிட்டு அந்தந்த ஆண்டுகளில் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பாடநெறிகள் உள்ளடங்கிய புத்தகத்தை எடுத்துச்சென்று அந்தந்த நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடி குறித்த பாடநெறிகளில் பங்குபற்றுவதற்கு ஆட்களை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டது. இருப்பினும், இத்துறையில் ஏற்படுகின்ற தளம்பல் காரணமாக இப்பாடநெறிகளில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை கூடிக்குறைந்துள்ளது. எது எவ்வாறிருப்பினும், அந்தந்தக் காலத்திற்கேற்ப சில இலக்கிடப்பட்ட பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்டு விசேட | நிறுவனத்தினால் குறித்த பாடநெறிகளிற்கான பாடவிதானங்களையும் பயிற்சிநெறிக் கட்டணங்களையும் திருத்தியமைத்து மாற்றுவழிகளின் மூலம் பங்குபற்றுவோர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவைக்கமைய, பாட விதானங்களைத் திருத்துவதற்கும் பாடநெறிக் கட்டணங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டு எண்ணிக்கையினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நிறுவனங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன், அவ்வப்போது செய்திப்பத்திரிகை அறிவித்தல்களும் பிரசுரிக்கப்பட்ட போதிலும், பாநெறிகளில் பங்குகோள்வோர் குறைந்துள்ளனர். .இருப்பினும், மாற்றுவழித் துறைகளில் கவனம்செலுத்தி நிறுவனத்தின் இலக்கிடப்பட்ட வருமானத்தை அடைந்துகொள்வதற்குத் தேவையான பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன. | |
| (ஆ) | கரும்பு மற்றும் கறுவா இற்கான பயிற்சி நெறிகளை நடாத்துவதற்குப் போதிய பௌதீக மற்றும் மனித வளம் நிறுவனத்தில் காணப்பட்ட போதிலும் திட்டமிடப்பட்டவாறு பயிலுனர்களை சேர்த்து பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன், கரும்பிற்காக 2015, 2016 ஆம் ஆண்டுகளிலும் கறுவாவிற்காக 2015, 2017 ஆம் ஆண்டுகளிலும் எவ்வித பயிற்சிநெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த இரண்டு ஆண்டுகளிலும் கரும்பு மற்றும் கறுவாவிற்காக பாடநெறிகள் தயாரிக்கப்பட்டு பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இரண்டு துறைகளிற்கும் உரித்தான நிறுவனங்களிடமிருந்து போதிய கோரிக்கைகள் கிடைக்காமை காரணமாக எமது நிறுவனத்திற்கு மாத்திரம் அவ்வாறான துறைகளிற்கு பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிட முடியாதுள்ளது. அவ்வாறே, அந்தந்த நிறுவனங்களினாலும் அவற்றினது மட்டத்தில் பாடமநெறிகள் நடாத்தப்பட்டிருந்தமையால் வெளி நிறுவனமான எமது நிறுவனத்தின் பால் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |

| | | |
|---|---|---|
| (இ)2018 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை வெளிக்கள உத்தியோகத்தர் பாடநெறிகளிற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த மாணவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை கருத்திற்கொண்டு பாடநெறிகள் திட்டமிடப்பட்டிருக்காமையால் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையெ 54 மற்றும் 53 இலிருந்து முறையே 36 மற்றும் 39 ஆகக் குறைவடைந்திருந்தது. இது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் திரும்பியிருக்கவில்லை. | நிறுவனத்தினால் பாடநெறிகளைத் தயாரிக்கையில் சந்தை வேலைவாய்ப்பு நிலைமை ஆராயப்பட்டு அந்தந்த துறைகளில் போதியளவு வெற்றிடங்கள் காணப்படுதல் உறுதிசெய்யப்பட்டு அதன் அடிப்படையில் பயலுனர்கள் சேர்க்கப்பட்ட போதிலும், குறித்த பயிலுனர்கள் நீங்கிச் சென்றிருப்பது வேலைவாய்ப்பு இன்மையினாலன்றி அவர்களது தனிப்பட்ட நோக்கங்களின் நிமித்தமாகும் என்பது நிறுவனத்தினால் உறுதிசெய்து கொள்ளப்பட்டுள்ளது. | பாடநெறிகளிற்காக தெரிவுசெய்யப்பட்டோர் பாடநெறிகளிலிருந்து நீங்கிச் செல்வதற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து மாணவர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஏற்ற வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) 2016 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தேயிலை வெளிக்கள உத்தியோகத்தர் பாடநெறிகளை பூரணப்படுத்திய மாணவர்கள் NVQ04 தகைமையினை பூரணப்படுத்தியுள்ளார்கள் என தொலைநோக்கு மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்து அவர்களிற்கு சான்றிதழை வழங்குவதற்கு றிறுவனம் தவறியிருந்தது. அதன்காரணமாக குறித்த மாணவர்களிற்கு குறித்த மாணவர்களிற்கு உள்நாட்டு மற்றும் வெறிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற முடியாது போயிருந்தது. | குறித்த பாடநெறிகளிற்காக தொலைநோக்கு மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் NVQ04 சான்றிதழ் வழங்குதல் தாமதிக்கப் பட்டமை காரணமாக தேவையான இறுதி மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தாமதிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த நிபுணத்துவச் சான்றிதழ் கிடைத்துள்ளதுடன் பாடநெகளை வெற்றிகரமாக பூரணப்படுத்திய மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்காக தொலைநோக்கு மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிற்கு (TVEC) அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். . | பாடநெகளை வெற்றிகரமாக பூரணப்படுத்திய மாணவர்களிற்கு குறித்த தகைமைச் சான்றிதழை துரிதமாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) விவசாய விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை பரிமாறிக் கொள்ளல், விவசாயத் தொழில் ஆராய்ச்சி செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயலமர்வுகள், கருத்தரங்குகள், பயிற்சி நெறிகளை ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்தல், தொழில்நுட்ப பதவியணியினருக்கு வதிவிட (Internship) பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றை நிறைவேற்றும் நோக்குடன் வடமேல் மாகாண பல்கலைக்கழகத்துடன் 2016 யூன் 22 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வடமேல் மாகாண பல்கலைக் கழகத்திற்கும் நிறுவனத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறுவனத்தினால் ஆண்டுமுழுவதும் உத்தியோகத்தர்கள் வடமேல் மாகாண பல்கலைக்கழத்தில் குறித்த பணிகளிற்காகவும் வடமேல் மாகாண பல்கலைக்கழத்தின் விரிவுரையாளர்கள் நிறுவனத்தில் நடாத்தப்பட்ட அவ்வாறான செயற்பாடுகளிலும் பங்குபற்றியுள்ளனர் என்பதனை அறியத்தருகின்றோம். | புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பாடநெறிகள் நிறுவனத்தினால் நடாத்தப்படுதல் வேண்டும். |